## தடுக்கப்பட்டவை

ஆசிரியர்: அஷ்ஷைக் முஹம்மது ஸாலிஹ் அல் முனஜ்ஜித், தமிழில்: அ. உமர் ஷரீ∴ப்

---


- ○ பதிப்புரை
- ○ முன்னுரை
- ○ கொள்கையில்
- ○ சுத்தம் செய்வதில்
- ○ தொழுகையில்
- ○ பள்ளிவாசல்களில்
- ○ ஜனாஸாவில்
- ○ நோன்பில்
- ○ ஹஜ் மற்றும் குர்பானியில்
- ○ வியாபாரம், தொழில் துறைகளில்
- ○ மணம் முடிப்பதில்
- ○ பெண்களுக்குரிய விஷயங்களில்
- ○ உணவு சம்பந்தப்பட்டவைகளில்
- ○ ஆடை அலங்காரத்தில்
- ○ பேசுவது தொடர்பானவைகளில்
- ○ உண்பது, குடிப்பதில்
- ○ தூங்கும்போது
- ○ இதர விஷயங்களில்
- ○ நூறு பெரும் பாவங்கள்
- ○ திருமணம் மற்றும் இதர நிகழ்ச்சிகளில் நடக்கும் தவறுகளும் அனாச்சாரங்களும்


### பதிப்புரை

தாங்கள் படிக்கும் இந்நூல் அளவில் மிக சிறியதாக இருப்பினும் இதன் பயன் மிகப் பெரியது.

ஏனெனில், மார்க்கத்தில் தடை செய்யப்பட்ட வைகளை தெரிந்து, அவைகளைவிட்டு, தன்னை முற்றிலும் தவிர்த்துக் கொள்வது மிக அவசியமான ஒன்றாகும்.

நன்மைகளை செய்வது (ஈமானை) இறை நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது அதை அதிகப்படுத்துகிறது. அவ்வாறே, பாவங்களில் ஈடுபடுவதும் தடுக்கப்பட்டவைகளை செய்வதும் இறை நம்பிக்கையை பலவீனப் படுத்தி, ஈமானை குறைத்துவிடுகிறது.

இந்நூலின் ஆசிரியர் பெரும் மார்க்க மேதை. முற்றிலும் ஆதாரப்பூர்வமான விஷயங்களையே இங்கு குறிப்பிட்டுள்ளார்கள்.

இத்துடன் மற்ற மார்க்க அறிஞர்களின் சில சிறு குறிப்பேடுகளையும் மொழிபெயர்த்து இணைத்து வெளியிட்டுள்ளோம்.

இந்நூலை படிக்கும் நண்பர்கள் இதில் தவறுகள் இருப்பின் எங்களுக்கு தெரியப் படுத்தவும். இன்ஷா அல்லாஹ் மறுபதிப்பில் திருத்திக் கொள்கிறோம்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் இதன் மூலம் நற்பலன் தருவானாக! ஆமீன்.

அ. உமர் ஷரீஃப்

ஸஃபர் 8 ஹிஜ்ரி 1425

## முன்னுரை

அகிலத்தாரின் இறைவனான அல்லாஹ் விற்கே எல்லாப் புகழும்! இறையருளும் ஈடேற்றமும் நமது தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தார்கள் தோழர்கள் அனைவருக்கும் உண்டாகட்டுமாக!

,jw;F Kd; ‘myl;rpakhf fUjg;gLk; Mgj;jhd Fw;wq;fs;’ vd;w E}ypy; Mjhuq;fSlDk; rw;W tpsf;fq;fSlDk; nra;af; $lhjitfs;> ,izitj;jy;> ngUk; ghtq;fs;> rpW ghtq;fs; gw;wp Fwpg;gpl;bUe;Njhk;. kf;fs; ghtj;jpy; tpo NeupLk; rpy epiyikfisg; gw;wpAk; mjpy; tptupj;jpUe;Njhk;.

அல்லாஹ்வின் வேதத்திலும் நபி (ஸல்) அவர்கள் சொல்களிலும் நாம் செய்யக் கூடாது என்று வந்திருப்பவைகள் ஏராளமாக உள்ளன. அல்லாஹ்வின் கோபத்திலிருந்தும் அவனது தண்டனையிலிருந்தும் தப்பித்துக் கொள்வதற் காக அவைகளைத் தெரிந்து, அதிலிருந்து விலகிக் கொள்வது அவசியமாகும்.

ஆகவே, மார்க்கம் என்பது பிறருக்கு நன்மையை நாடுவது என்ற நபிமொழிக்கிணங்க மார்க்கத்தில் விலக்கப்பட்டிருக்கும் காரியங்களை ஒருங்கிணைத்து இந்நூலில் நான் தொகுத்துள்ளேன். நானும் எனது முஸ்லிமான சகோதரர்களும் இதை அறிந்து பயன்பெற வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

இங்கு கொடுக்கப்பட்டுள்ள அனைத்தும் திருக்குர்ஆன் மற்றும் ஆதாரப்பூர்வமான நபிமொழிகளிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். திருக்குர்ஆன் வசனங்களையோ அல்லது ஹதீஸ்களையோ கூறாமல் அதில் கூறப் பட்டுள்ள விஷயங்களை மட்டுமே இங்கு குறிப்பிட்டுள்ளேன்.

அல்லாஹ் நம் அனைவரையும் மானக் கேடான அனைத்து செயல்களிலிருந்து விலக்கி வைப்பானாக! மேலும், நம்மை மன்னித்து அருள்வானாக!

முஹம்மது ஸாலிஹ் அல் முனஜ்ஜித்

## கொள்கை சம்பந்தமாக தடுக்கப்பட்டவைகள்

- அல்லாஹ்விற்கு இணைவைப்பதின் அனைத்து வகைகளும்.

- தங்கத்தை தங்கத்திற்குப் பகரமாக, வெள்ளியை வெள்ளிக்குப் பகரமாக விற்கும் போது ஏற்றத்தாழ்வுடன் விற்பது. (ஆனால் ஒன்றுக்கொன்று சமமாகவும், ரொக்கமாகவும் இருந்தால் விற்பது கூடும்).
- ஒருவர் ஒரு பொருளை விற்பனை செய்து கொண்டிருக்கும்போது மற்றவர் குறுக்கிடுவது.
- ஒருவர் ஒரு பொருள் வாங்கிக் கொண்டிருக்கும்போது மற்றவர் குறுக்கிடுவது.
- பழங்களை அது பூவாக இருக்கும் போதும், பறிப்பதற்கு முன்னும் விற்பனை செய்வது.
- குறையுள்ள பொருளை மறைத்து விற்றுவிட்டு அதன் கிரயத்தை உண்பது.
- நிறுவையில், அளவையில் குறை செய்வது.
- பொருள்களை பதுக்குவது.
- வியாபாரிகள் ஊருக்குள் வருவதற்கு முன் ஊருக்கு வெளியில் சென்று வியாபாரம் பேசுவது.
- நகரத்தில் உள்ளவர் கிராமவாசிக்கு விற்றுக் கொடுப்பது. (அதாவது, கிராமவாசியின் பொருளை விற்பதற்கு இடைத் தரகராக செயல்படுவது. அவரது பொருளை தானாக விற்பனை செய்வதற்கு விட்டுவிட வேண்டும்.)
- குர்பானி கொடுத்துவிட்டு அதன் தோலை விற்று, குர்பானி கொடுத்தவர் பயன்பெறுவது.
- வீடு, தோட்டம் போன்றவற்றில் பங்காளியாக இருப்பவர், தனது பங்கை வாங்க சக்தியுள்ள மற்ற பங்காளியிடம் விற்காமல் பிறரிடம் விற்பது.
- திருக்குர்ஆனை ஓதிக்காண்பித்து சம்பாதிப்பது.
- எத்தீம்களின் (அநாதைகளின்) பொருளை சாப்பிடுவது.
- சூதாடுவது.
- அபகரிப்பது.
- லஞ்சம் வாங்குவது, லஞ்சம் கொடுப்பது.
- திருடுவது.
- வெற்றி (கனீமத்து)ப் பொருளை பங்கிடும் முன் அனுமதியின்றி எடுத்துக் கொள்வது.
- கொள்ளையடிப்பது.
- அநியாயமான முறையில் மக்கள் சொத்துக்களை அனுபவிப்பது.
- மக்களின் சொத்துக்களை வீணடிப்பது.
- கொடுக்கும் நோக்கமின்றி கடன் வாங்குவது.
- மக்களுக்கு கொடுக்க வேண்டிய பொருளை குறைத்துக் கொடுப்பது.
- கண்டெடுக்கப்பட்ட பொருளை மறைப்பது, மறைக்க முயற்சிப்பது.

- ஒரு காலணியை மட்டும் அணிந்து கொண்டு நடப்பது.
- ,izitg;gtu;fisg; Nghy; kPiria tsu;j;J jhbia rpiug;gJ
- முகம், புருவத்தின் முடிகளை பிடிங்குவது.
- பெண் மொட்டையடித்துக் கொள்வது.
- rtupKb fl;LtJ
- நரை முடியைப் பிடுங்குவது.
- நரைக்கு கருநிறம் பூசுவது (டை அடிப்பது).
- தலையில் சில பகுதிகளை சிரைத்து சில பகுதியை விட்டுவிடுவது.
- உயிருள்ளவைகளை வரைவது.
- பட்டாடையில் அமர்வது.
- புலித்தோல் அல்லது தற்பெருமை யூட்டும்படியான விரிப்புகளில் அமர்வது, அவைகளைப் பயன்படுத்துவது.
- சுவர்களை திரையிட்டு அலங்கரிப்பது.

**பேசுவது சம்பந்தமாக தடை செய்யப்பட்டவைகள்**

- பொய் சாட்சி சொல்வது.
- ஒழுக்கமான பெண் மீது பழி சுமத்துவது.
- பெண்களின் தன்மைகளைக் கூறி கவிதை எழுதுவது, பாடுவது.
- ஒழுக்கமானவர் மீது பழி சுமத்துவது.
- இட்டுக் கட்டுவது.
- குத்தலாகக் பேசுவது, ஏசுவது.
- இழிவான பட்டப் பெயர்களிட்டு அழைப்பது.
- புறம் பேசுவது.
- கோள் சொல்வது.
- முஸ்லிம்களை பரிகசிப்பது.
- பரம்பரைகளைக் கூறி பெருமை பேசுவது.
- பரம்பரையைக் கூறி குத்திக் காட்டுவது.
- கெட்ட வார்த்தைகளைப் பேசுவது.
- அசிங்கமாகப் பேசுவது, அறுவறுப்பாகப் பேசுவது.

